Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0, பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரு. 5-0-0 வெளிநாடு ரு. 7-0-0

மாலை 20 } ஈரோடு 18-1-1947 தைமீ 5உ. { மலர் 15

## கார்ல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு

(சென்றவாரத் தொடர்ச்சி)

இந்த ஜர்மானிய வாலிபரை "ரீனிச் சீட்டங்" பத்திரிகை ஆபீசில் மார்க்ஸ் ஒரு சமயம் சந்தித்தார். ஆனால் அந்தச் சமயத்தில் அந்த வாலிபரைக் கவனிக்கவில்லை. இப்பொழுது அவர் எழுதிய கட்டுரையைக் கண்டதும் மார்க்ஸ் எஞ்சலைசப்பற்றிச் சிந்திக்கலானார் இதை அறிந்த எஞ்சல்ஸ் செப்டம்பர் மாதம் பாரிசுக்கு இவரைக்காண வந்தார். இதிலிருந்து இருவரும் அவர்களது ஜீவிய காலம் வரை ஒரே மனதுடைய நண்பர்களாய் விளங்கினார்கள்.

இக்காலத்தில், மார்க்ஸ் எழுதிய நூல்கள் இன்னவைகள் என்றும் பிரிக்கமுடியாது. ஆனால் மார்க்ஸ் நூல் முதல்தரமானதென்றும் எஞ்சல்ஸ் நூல் இரண்டாம் தரமானதென்றும் நாம் அறிவோம். எஞ்சல்சுக்கு மார்க்ஸின் அறிவுத்திறமையும் கல்வித் திறமையும் கிடையாது. ஆனால் அவரது நூல்கள் தெளிவாயும் யாவரும் எளிதில் உணரக்கூடியவைகளாயுமிருக்கும். இவருடைய சமயோசித உதவியில்லாதிருந்தால் மார்க்ஸால் தனது அறிவாகிய விளக்கை இவ்வளவு தூரத்திற்குப் பிரகாசிக்கச் செய்திருக்க முடியாது. இவர்தான் அவரது அறிவாகிய சுடரை தூண்டிக்கொண்டேயிருந்தவர் என்றும் சொல்லலாம். பொருளாதாரத் துறையிலும் மார்க்ஸுக்கு இவர் உதவி செய்யாதிருந்தால் அவர் பசியால் மாள நேர்ந்திருக்கும்.

### தர்க்கசாஸ்திர ஆராய்ச்சி

இவர்களது உடல்கள்தான் தனித்தனியானதே ஒழிய அவர்களது மனம் மூளை ஆகியவைகள் ஒன்றேயென்று சொல்லவேண்டும். இவர்கள் இருவரும் ஒத்து வேலை செய்ய தொடங்கியதும் விஞ்ஞான ரீதியான சோஷியலிசத்தின் அடித்தளத்தைக் கண்டுவிட்டதாக எண்ணினார்கள். இது வரையிலும் ஹெகலியன் என்ற தர்க்க சாஸ்திரியின் கொள்கையைப் பின்பற்றி வந்தார்கள் எண்ணங்கள் உண்மையானவைகள் என்றும் அவைகளைத் தெளிவாக விளக்குவதுதான் தர்க்கசாஸ்திரம் என்று கூறப்படுவது என்றும் அவர் கற்பித்தார். தர்க்கத்தினால்தான் உண்மை வெளியாகும் என்றும் அவர் கூறியிருக்கிறார். இவ்விரு அறிஞர்களும் தர்க்கத்தைக் கைவிடவில்லை. ஆனால் பியூவர்பாக் என்ற தர்க்க சாஸ்திரியின் செல்வாக்கால் ஹெகலியின் முறை தப்பானதென அறியலானார்கள். எண்ணங்களே உண்மையானவைகள் என்று சொல்லப்படுமேயானால் உண்மையான உலகாயதமான விஷயங்களெல்லாம் எண்ணத்தால் ஆக்கப்படுகின்றன என்று சொல்லலாம். மனிதர்களுடைய எண்ணங்கள் எப்படி உண்டாகின்றன. நாம் காணும் நிலைமையையும்; சுற்றுப்புற சார்புகளையும் பொறுத்தாயிருக்கின்றன என்றே சொல்லலாம். சரித்திரப் போக்கும் வகுப்புப் பிரிவினைகளின் வளர்ச்சியும் புரட்சியின் வேகமும் விளக்கப்படலாயின. அவர்கள் தர்க்க சாஸ்திரங்களின் மூலமாகவே அவைகளை விளக்கிவிட்டார்கள்.

தர்க்கங்கள் மூலமாக இவர்களது பழைய நண்பர்களின் நூல்களையும் தாக்க ஆரம்பித்தனர். இவர்களிருவரும் எழுதிய "பரிசுத்த குடும்பம்" என்ற புத்தகத்தின் மூலமாக ஹெகலியன் கொள்கையில் ஒரு சிறிதும் பிறழாது இருந்துவந்த இவர்களது நண்பரான புருனோபாவர் என்பவரின் தவறுகளை விளக்கிவிட்டார்கள். மார்க்ஸ் பாரிஸில் வெளியிட்ட ஒரு கட்டுரையில் அவரது தோழரான ரூஜ் என்பவரைக் கண்டித்திருந்தார்.

மான்செஸ்டரில் உள்ள தனது தந்தையின் கம்பெனியில்

## திராவிட மாணவர் மத்திய கழக நிர்வாகக்குழு கூட்ட அழைப்பு

அன்புடையீர், திராவிட மாணவர் மத்திய கழக நிர்வாகக் குழு கூட்டம் தலைவர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் தலைமையில் திருச்சி கருணாநிதி பார்க்கில் 26-1-1947 அன்று மதியம் ஒரு மணியளவில் நடைபெறும். திராவிட மாணவர்கள் அனைவரும் தவறாது வருகை தருமாறு வேண்டுகிறேன்.

இரா. இளம்வழுதி,
பொதுச்செயலாளர்,
அண்ணாமலைநகர்.

---

ஏஞ்சல்ஸ் வேலையில் அமர்ந்தார். அங்கிருந்துகொண்டு கைத்தொழிலின் உண்மையான போக்கு, அதன் பலாபலன், முதலாளித்துவ வளர்ச்சி எப்படி தொழிலாளிகளால் விருத்தி அடைகின்றன என்பனபோன்ற விஷயங்களைத் தெளிவாக அவ்வப்போது தனது நண்பருக்கு எடுத்துக்கூறிக்கொண்டு வந்தார். 'இங்கிலாந்தில் தொழிலாளர்கள் நிலை' என்ற புத்தகத்தை வாசித்தறியலானார் பின்னால் தனது சொந்த ஊராகிய பார்மெனுக்குச்சென்று தன் தந்தையிடம் தாம் ஒரு பொதுஉடைமைவாதி என்றும் இனிமேல் தமது தொழிற்சாலையில் தாம் பங்குகொள்ள முடியாதென்றும் சொல்லி தந்தையுடன் சச்சரவு செய்துகொண்டு பிரஸ்ஸல்ஸுக்குச் சென்றுவிட்டார். மார்க்ஸும் 1845ல் அங்குவந்து சேர்ந்தார் ஏனெனில் பிரஷ்யாதேச சர்க்காரின் தூண்டுதலின்பேரில் பாரிஸில் மார்க்ஸை தங்கியிருக்க பிரஞ்சு சர்க்கார் அனுமதியளிக்கவில்லை. பிரஸ்ஸல்ஸில் இருவரும் பழையபடி உற்சாகமாகப் பொது சேவையில் ஈடுபட ஆரம்பித்தார்கள்.

[தொடரும்]

## நன்றி

தமிழர் திருநாளாகிய பொங்கல் நாளன்று நமக்கு வாழ்த்துகள் அனுப்பிய தோழர்களுக்கு நமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆ-ர்

## திருத்தம்

4-1-47 குடியரசு இதழ் 7ம் பக்கம் 3ம் பத்தியில் 'பிறப்பு' என்ற தலைப்பில் "நன்னிலம் தாலுக்கா ஆலங்குடியில் 20-6-46ல் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்ட" என்பதை "20-6-45ல் பெரியார் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்ட" என்று வாசித்துக்கொள்ளவும்.

## தேவை

அடியக்கமங்கலம், கொடிக்கால் பாளையம் மாங்குடி லயன் ஆகிய இடங்களுக்கு திராவிட இயக்க பத்திரிக்கையை விற்பனை செய்யவும் சந்தா சேர்க்கவும் வசூல் செய்யவும் டிபாசிட் கட்டக்கூடிய சப், ஏஜண்டுகள் தேவை.

விலாசம்.- நா. இராமையா,
நியூஸ் ஏஜண்டு, தெற்கு வீதி,
திருவாரூர்.

---

(8ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டிக் காங்கரஸ் சோஷலிஸ்ட்களுக்குச் செல்வாக்கு தேடிக் கொடுக்கப்படுவதற்காகத்தான் இன்று கம்யூனிஸ்ட்கள் அரசாங்கத்தாரால் அடக்கப்படுகின்றனர். கம்யூனிஸ்ட்களை ஒழித்துக்கட்டி சோஷலிஸ்டுகளை உட்புகுத்தப் பாடுபடும் அரசாங்கத்தின் தன்மை 'அவன் கிடக்கிறான் குடிகாரன் எனக்கு ஒரு மொந்தை போடு' என்று கூறுவதைப் போலிருக்கின்றது.

உள்ளபடியே நாட்டில் அமைதி நிலவச்செய்ய வேண்டுமானால் கம்யூனிஸ்ட்களை ஒழிக்கத் திட்டம் வகுப்பதைவிட "அன்னியர்கள் தொழிற்சங்கத்தில் புகலாம்" என்ற சட்டத்தை ஒழித்துவிடவேண்டும் என்று கூறுகிறோம்.

## பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

பெரியார் அவர்கள் சென்றவாரம் சீர்காழி, வெள்ளகோவில், பதுநகரம், சூலூர் ஆகிய இடங்களுக்குச்சென்றுவிட்டு இவ்வாரம் முழுதும் ஈரோட்டில் இருக்கின்றார்கள்.

பின்னர் 20-1-47ல் காஞ்சிக் கோயிலுக்கும் 25-1-47ல் திருச்சிக்கும் 26ல் தூத்துக்குடிக்கும் .27ல் அருப்புக்கோட்டைக்கும் செல்வார்கள்.

---

விரைவில் வெளிவரும்!

சேலம் காலேஜ்
பெரியார் சொற்பொழிவு

'தத்துவவிளக்கம்'

புத்தகவடிவில் அழகிய பதிப்பு:
வெளியிடுவோர்:-

P. ஷண்முகவேலாயுதம்,
நாதன் & கோ, ஈரோடு.

---

விற்பனைக்குத் தயார்!

பெரியார் அவர்கள் வடநாடு சுற்றுப்பிரயாணத்தின்போது அரித்துவாரம் கன்கல் கலைஞான சங்கத்தில் "மேல்நாடும் கீழ்நாடும்" என்பது பற்றி ஆற்றிய சொற்பொழிவும், வ. ஆ திருப்பத்தூரில் நடைபெற்ற சுலோச்சனா—சம்பத் திருமணத்தின்போது "பெண்கள் அலங்காரப் பொம்மைகளா?" என்ற தலைப்பில் பேசிய பேச்சும், "காங்கரஸ் திராவிடனுக்கு விண்ணப்பம்" என்று எழுதிய உருக்கமான கட்டுரையும் தனித்தனிப் புத்தகங்களாக வெளிவந்துள்ளன. திராவிடர்களனைவரும் படித்துப் பயன் பெறவேண்டிய நூல்கள்; குறிப்பாக காங்கரசில் உள்ள திராவிடர்கள் "காங்கரஸ் திராவிடனுக்கு விண்ணப்பம்" என்ற நூலைப் படித்து உணர வேண்டுகிறோம்.

மூன்று புத்தகங்களின் விலை அணா 5. 6-அணா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு மூன்று புத்தகங்களும் புக்போஸ்டில அனுப்பப்படும்.

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

ஒ. எம். சுப்பிரமணியன்



## சூலூரில் பெரியார்

11-1-47 மாலை 5 மணிக்குச் சூலூர் தோழர் எஸ். கே. கருப்பண்ணன் அவர்கள் வீட்டிலிருந்து பெரியார் அவர்கள் அழகாக அலங்கரிக்கப்பட்ட வண்டியில் ஊர்வலமாக முக்கிய தெருக்களின் வழியாக அழைத்துச் செல்லப்பட்டனர். க. ச. படையினர் 300 பேரும் பொதுமக்கள் 1500 பேரும் ஊர்வலத்திலும் 5000 பேர் கூட்டத்திலும் கலந்து கொண்டனர்.

கூட்டம் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அலங்கரிக்கப்பட்ட பந்தலை ஊர்வலம் அடைந்ததும், தோழர் எஸ். கே. கருப்பண்ணன் அவர்கள் தலைமையில் கூட்டம் தொடங்கியது. மீனாட்சியம்மாள், மருதாயி அம்மாள் ஆகிய தோழியர்களும் மற்றும் பலரும் இயக்கப் பாடல்கள் பாடினார்கள்.

சூலூர் திராவிட மாணவர் சழகம், தொழிலாளர் சங்கம், செந்தமிழ் அறிவு நிலையம் திராவிடர் சழகம், பல்லடம் திராவிடர் சழகம், திருப்பூர் திராவிட கழகம், பீடித் தொழிலாளர் சங்கம், குனியமுத்தூர் திராவிடர் கழகம் ஆகியவற்றின் சார்பிலும் பெண்கள் சார்பிலும் பெரியாருக்கும் கூட்டத் தலைவருக்கும் பல மாலைகள் சூட்டப்பட்டன. தோழர் வி. பெருமாள் அவர்களால் 101 காலணாவும், தோழர் பி. பெருமாள் அவர்களால் 101 காலணாவும், பங்கஜாமில் திராவிடர் தொழிலாளர் சார்பில் 69 காலணாவும் சேர்த்த சிறு பணமுடிப்பு பெரியாருக்கு அளிக்கப்பட்டது. பின்னர் திராவிடர் சழக நிதிக்காகச் சூலூர் ரூ. 200ம், வெளியூர் ரூ. 157ம் கொண்ட பணமுடிப்பு பெரியாருக்கு அளித்தனர்.

பின்னர் புலவர் ஆறுமுகம், புலவர் நன்னன் ஆகிய தோழர்கள் பேசிய பின் பெரியார் அவர்கள் திராவிடர் கழகக் கொள்கைகளையும், தற்கால அரசியல் ஊழல்களைப்பற்றியும் விளக்கமாக $2\frac{1}{2}$ மணி நேரம் சொற்பொழிவாற்றினார்கள்.

பின்னர் தலைவர் முடிவுரை கூறினார். செயலாளர் நன்றிகூறிய பின்னர் 'வாழ்க பெரியார்' 'வாழ்க திராவிடம்' 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற வாழ்த்தொலிகளுடன் இரவு 10 மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது.

வெளியூர் தோழர்கள் அனைவருக்கும் தோழர் கருப்பண்ணன் அவர்கள் இல்லத்தில் விருந்தளிக்கப்பட்டது.

## ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேசம்!

### அய்யமார் வயிற்றில் அன்னப் பிரவேசம்!

திருவாங்கூர் மகாராஜாவுக்குப் பகிரங்கக்கடிதம்:-

'ஹரிஜனங்களுக்குப் பத்மநாபர் கோவிலைத் திறந்துவிட்டதால் அசோக மகாராஜாவுக்குச் சமானவர் என்று உலகம் முழுவதும் விளம்பரம் பெற்றுக்கொண்ட திருவாங்கூர் மகாராஜாவே, ஓர் விண்ணப்பம்.

சகல விஷயத்திலும் பரம ஏழைகளாகிய ஹரிஜனங்களுக்கு வெறும் கோயிலை மாத்திரம் திறந்து விட்டு விட்டு அதே பத்மநாபர் கோவிலுக்குள் தினந்தோறும் இருமுறை ஆயிரக்கணக்கான பிராமணர்களுக்கு மாத்திரம் வடை பாயாசத்தோடு அன்னதானம் செய்து வருவது பத்மநாபரின் பக்தரொன்னும் தங்களுக்கு நியாயமாகத் தோன்றுகிறதா?

பிராமணர்கள் 'ஹரிஜனங்களைவிட ஏழைகளா? பிராமணர்கள் பட்டினி கிடக்கும் கூட்டத்தைச் சேர்ந்தவர்களா?

தங்கள் ராஜ்யத்தில் திவான் முதலிய சகல உத்தியோகங்களிலும் பிராமணர்களல்லவா அமர்ந்து 'ஆளும் ஜாதியினராக' இருக்கிறார்கள்! படிப்பில் குறைவா? பணத்தில் குறைவா? செல்வாக்கில் குறைவா? எவ்விதத்திலும் ஒரு குறைவுமில்லாத பிராமணர்களுக்கு இன்னும் இந்த அன்னதானம் ஏன்? பசியாயிருப்பவர்களுக்கு அன்னமிடுவதா? அல்லது பசி என்பதே இன்னதென்று தெரியாதவர்களுக்கு அன்னமிடுவதா?

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறக்கப்படாதகோவில்களை மகா தைரியத்துடன் அவர்களுக்குத் திறந்துவிட்ட தங்களுக்கு அன்னதான விஷயத்திலும் ஒரு மாறுதலைச் செய்வது ஒரு பெரிய காரியமா?

தீண்டாதார்களுக்கு 'ஹரிஜனம்' என்ற அழகிய பெயரிட்டுவிட்டதால் மட்டும் அவர்களுடைய தரித்திரம் நீங்கிவிடுமா?

'ஹரிஜனம்' என்றால் என்ன அர்த்தம்? கடவுளின் பிள்ளைகள் என்பதல்லவா அர்த்தம்? கடவுளின் பிள்ளைகளுக்கல்லவா பத்மநாபர் முதலிய ஆலயங்களிலும் சர்வ அநுகூலங்களுமிருக்க வேண்டும்? கடவுளின் பிள்ளைகளுக்கில்லாத அன்னதானம் மைத்துனன் (?) பிள்ளைகளுக்கு மாத்திரம் ஏன்?

இப்படிக்கு,
"யார் எழுதினாலென்ன?"

## பொங்கல் திருநாள்

### காலிகளின் கல்வீச்சு

12-1-47 மாலை 7 மணிக்கு ஈரோடு பகுத்தறிவு சொற்பொழிவுக் கழகத்தின் சார்பில் ஈரோடு கீரைக்காரத்தெரு மைதானத்தில் தோழர் பி. சண்முகவேலாயதம் அவர்கள் தலைமையில் பொங்கல் திருநாளையொட்டி ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் என். சு. பாலகுரு அவர்கள் வாழ்த்துப்பாக்கள் பாடியபின்னர், எஸ். அப்பாவு, சுப்பையன், புலவர் கி. தியாகராசன் ஆகிய தோழர்களும், அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களும் பொங்கல் விழா குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

பின்னர் தலைவர் முடிவுரை கூறிக்கொண்டிருக்கும்போது பார்ப்பனர்களால் ஏவிவிடப்பட்ட காலிகள் கல்லையும் இரும்புத்துண்டையும் கூட்டத்தில் வீசினர். தோழர் மதியழகன் கல்லால் அடிபட்டார். தலைவர் கல்லெறிந்த காலிகளை சொந்துகொள்வதில் பயனில்லையென்றும், அவர்களும் திராவிடர்கள்தானென்றும், திராவிடர்களுக்குள்ளேயே கலவரத்தை மூட்டிவிட்டு வேடிக்கைப்பார்க்கும் ஆரியத்தை அடியோடு தொலைக்கும் நாள் அண்மையில் உள்ளதென்றும் மிக வுணர்ச்சியாகப் பேசினார்கள். பின்னர் தலைவர் காலிகளால் வீசப்பட்ட கல்லையும், இரும்புத்துண்டையும் ஏலத்திற்கு விட்டார். அவை $5\frac{1}{2}$ ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டன.

பிறகு தோழர் பெருமாள் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

ரோஜா முத்தையா

# குடி அரசு

1947 ௵ ஜனவரி ௴ 18உ


## பொங்கல் விண்ணப்பம்

ஆரியம் திராவிடத்தைவிட்டு அடியோடு அகன்றால் ஒழிய திராவிடத்திற்கு மீட்சி இல்லை. வாழ்வு இல்லை, மானமில்லை, மனிதத்தன்மை இல்லை என்று தூக்குமேடையில் நின்று கிட்டியை மாட்டிக்கொண்டு கூடக் கூறுவோம்.

திருஇடம் என்னும் திராவிடம் இன்று தீண்டப்படாதத் தன்மை எய்தி அதன் மகன் பிறவிச் சூத்திரன், பஞ்சமன் என்னும் நிலை அடைந்ததற்கு ஆரியமல்லாமல் வேறு எதனைக் காரணமாகக் கூறமுடியும்? ஆரியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆராய்ச்சிச் சுவடுகளில் இருந்து, அதற்கும் முற்பட்டதான கண்டுபிடிப்புச் சின்னங்களில் இருந்தும் ஆரியத்தாலேயே திராவிடம் அழிந்துபட்டு இந்நிலைமைக்கு வந்தது என்பதைப் புலவர்கள், அறிஞர்கள் சாதாரணப் பகுத்தறிவாளர்கள் ஐயமற அறிந்திருக்கும், அநுபவத்தில், நடைமுறையில் கண்டுகந்தும் வீழ்ந்துகிடக்கும் நிலையில் இருந்து திராவிடம் எழுச்சிபெற்ற நிலைக்கு வரவேண்டுமானால் ஆரியர் அருளால்தான் முடியும் என்று ஆரியருக்கு அநுமாராக அடி சுமந்து நிற்பானானால் இதைவிட மதியீனத்தன்மை வேறு என்ன இருக்கமுடியும்?

காட்டுமிராண்டித் தன்மையில் இருந்த நாடுகளும், காட்டுமிராண்டி மக்களும் இன்று மனிதத்தன்மை பெற்று மேன்மைவாழ்வு வாழ்கின்ற இந்தக் காலத்தில் திராவிடம் சாதாரண மனிதத்தன்மைபெற மக்களைக் கோவில்களுக்குள் நுழைப்பதும், அதையே மாபெரும் மனிதத் தொண்டாகக் கருதுவதுமாயிருந்தால் திராவிடத்திற்கு என்றாவது எழுச்சி ஏற்படும் என்று யார்தான் கருதமுடியும்.

திராவிடத்தின் சமுதாய முயற்சி இதுவாய் இருந்தால் இனி அரசியல்முயற்சி எப்படி இருக்கின்றது என்று பார்ப்போமேயானால் அது மகாமகா மோசமான மடத்தன்மையதாய் இருக்கின்றது என்றுதான் சொல்லவேண்டும்.

இன்றைய அரசியல் பிரச்சினை என்ன என்று பார்ப்போம். அது பெரிதும் இந்துக்கள் முஸ்லிம்கள் போராட்டம் என்பதல்லாமல் வேறு என்ன என்று சொல்லமுடியும்? இந்துக்கள் முஸ்லிம் போராட்டம் என்ன என்று பார்ப்போமானால் ஆரியத்திற்கும் ஆரியமல்லாதற்கும் அல்லது ஆரியர்களுக்கும் ஆரியர்கள் அல்லாதவர்களுக்கும் போராட்டம் என்பதல்லாமல் வேறு உள் கருத்து என்ன என்று சொல்லமுடியும்?

இந்து முஸ்லிம் என்பது ஒரு மதத் தத்துவ வேறுபாடேயாகும். என்னவென்றால் ஒரு கடவுள் வழிபாடு—பல கடவுள் வழிபாடு, உருவக் கடவுள் வழிபாடு—அருவக் கடவுள் வழிபாடு, மக்கள் சமுதாயத்தில் ஒரு ஜாதி—மக்கள் சமுதாயத்தில் பல ஜாதி வகுப்பு, மக்கள் யாவரும் பிறவியில் சமம்—மக்கள் யாவரும் பிறவியில் வேறுபட்டவர்கள்!

என்பவைகளாகிய இந்தத் தன்மை பேதங்கள்தான் முஸ்லிம் மதமாகிய இஸ்லாத்திற்கும் இந்துமதமாகிய ஆரியத்திற்கும் இருந்துவரும் அடிப்படை பேதங்கள் ஆகும்.

இந்த அடிப்படையைவைத்து நடத்தப்படும் ஆரியர்கள், ஆரியரல்லாதவர்கள் (முஸ்லிம்கள்) என்கின்ற மக்கள் போராட்டத்தில் திராவிடத்தின்-திராவிடரின் கடமை என்ன என்று கேட்கிறோம். இந்தப் போராட்டத்திற்குத் திராவிடன் ஆரியத்திற்கு அடிதாங்கி நிற்பது அறிவுடைமையா அல்லது எதிர்த்து நிற்பது அறிவுடைமையா என்று சிந்திக்கும்படித் திராவிடப் புலவர்களையும் திராவிடக் காளைகளையும் இறைஞ்சுகின்றோம்.

இந்திய அரசியல் போராட்டமானது இந்துமுஸ்லிம் போராட்டம் என்னும் தன்மையை வெளிப்படையாய் அடைந்தவுடன் உண்மைத்திராவிடர் இந்திய தேசிய அரசியலைவிட்டு உடனே விலகி இருக்கவேண்டியதல்லவா மறத் திராவிடனின், மணிப் புலவனின் கடமையாக இருந்திருக்கவேண்டும்.

இஸ்லாம் மதம் அதாவது ஆரிய எதிர்ப்பு மதம் இன்று இந்தியாவில் இல்லாதிருக்குமானால் இஸ்லாம் மதம் இன்று இந்தியாவில் இல்லாதிருந்திருக்குமானால் திராவிடத் தேசியத் தோழனே! இன்று உனது கதி, நிலை, வாழ்வு, மானம் எப்படி இருந்திருக்கும் என்பதை வெளிக் கண்ணை மூடிக்கொண்டு மனக்கண்ணால் சற்று உள்ளேயே பார். என்ன காணும்? வேசிமகனாக, வைப்பாட்டி மகனாக உண்மையில் அட்டியாக, அடிமையாக, இழிமகனாக, கடையனாக இருந்திருப்பாயா இல்லையா? இன்னமும் உன் உடன்பிறந்த சோதரிகள் பலர் வேசிகள் என்பதையும் சோதரர்கள் பலர் வேசி மக்களே என்பதையும், உறவினர் பஞ்சமர், சண்டாளர், இழிநிலையர் என்பதையும் பெய

ராக இடமாகக் கொண்டு உண்மையிலேயே சட்டத்தில் சாத்திரத்தில் நடப்பில் அந்தப்படி நடத்தப்படுகிறார்களா? இல்லையா? சிந்தித்துப்பார். கோபப்படாமல் ஆத்திரப்படாமல் வெட்கப்பட்டுச் சிந்தித்துப் பார்.

ஆரிய இழிவில் இருந்து கொடுமையில் இருந்து திராவிடம் மீளவேண்டுமானால் திராவிடநாடு ஆரியநாட்டு சம்பந்தத்தில், பிணையில், பிடிப்பில் இருந்து பிரியவேண்டும் என்று திராவிட கழகம் சொன்னால் கல்யாண சுந்தரங்களுக்கும், மீனாட்சிசுந்தரங்களுக்கும் மற்றும் புலவர் மணிக்குழாங்களுக்கும் ஏன் கோபம் வரவேண்டும்? கோபிப்பவர்கள் புலவர்களாக இருக்கமுடியுமா? "எங்களுக்குப் புலையர் பட்டம் வேண்டாம்" என்று நாங்கள் சொல்லுவதைத் தடுப்பவர்கள் எப்படிப் புலவர்களாக இருக்க முடியும்? எப்படி தேசிய வீரர்களாக இருக்கமுடியும்? ஆரியம் ஒழிந்தால் ஒழிய அல்லது ஆரியத்தில் இருந்து விடுபட்டால் ஒழிய விலகினால் ஒழிய திராவிடர்களுக்கு எப்படிப் புலைப்பட்டம் நீங்க முடியும்? தேசியக் காளைகளே! நீங்கள்தான் சிந்தித்துப்பாருங்கள்.

புலவர் தோழர்களே! தேசிய வீரத் தோழர்களே! "இந்துஸ்தான்—பாக்கிஸ்தான்" என்பது ஆரியஸ்தான் ஆரியமல்லாதஸ்தான் என்பதல்லாமல் அதன் உண்மைக் கருத்து வேறு என்ன? ஆரியமல்லாதஸ்தான் என்பதற்குப் பதிலாக அதாவது அல்லாத என்கின்ற வார்த்தை கூடாது என்பதற்காக அதாவது நாம் எப்படி பார்ப்பனர் அல்லாதார் என்று சொல்லுவது இழிவு என்று கருதி திராவிடர் என்று சரித்திர கால ஆராய்ச்சிப் பெயரைப் பயன்படுத்துகிறோமோ அதுபோல் ஆரியத்தை வெறுத்தவர்கள், ஆரியத்தை ஏற்காதவர்கள் பாக்கிஸ்தான் என்று பெயர் சொல்லுகிறார்கள். அதுபோல்தான் நாமும் ஆரியமல்லாத நாடு என்பதற்குப் பதிலாக திராவிடநாடு என்கின்றோம். ஆகவே பாக்கிஸ்தான் என்பதும் திராவிட நாடு என்பதும் ஒரே அடிப்படையை ஒரே கருத்தைக் கொண்ட சொற்களே தவிர வேறுவேறு கருத்துக்கள் இலட்சியங்கள் கொண்டவைகள் அல்ல. அப்படி இருக்க திராவிடநாட்டில் திராவிட மக்கள் இடையில் பாக்கிஸ்தான் இந்துஸ்தான் பிரச்சினையைப் புகுத்தி அதன் சாக்கில் இந்து முஸ்லிம் கலவரங்களை, வெறுப்புகளை உண்டாக்கி இருப்பதானது ஆரியர்கள் சூழ்ச்சியே ஒழிய அதில் திராவிடநாட்டுக்கோ, திராவிட மக்களுக்கோ ஆகும் நலமான காரியம் ஒன்றுமே இல்லை; கேடேயாகும். பாக்கிஸ்தான் பிரச்சினைபற்றி திராவிட நாட்டில் திராவிடர்கள் இடையில் எதிர்ப்புப் பேசப்படுவது வேண்டப்படாத காரியமேயாகும்.

இன்று திராவிடநாட்டில் ஆரியப் பிரச்சினை உண்மையானதாகவும் யோக்கியமானதாகவும் ஒன்று இருக்கவேண்டுமானால் அது ஆரியப்பிடியில், சம்பந்தத்தில் இருந்து திராவிட நாடு விலகவேண்டும், விடுபட வேண்டும் என்பதைத் தவிர வேறு எதுவும் இருக்கமுடியாது. திராவிடநாடு விடுபடுவதைத் தடுப்பதும் எதிர்ப்பதுமான காரியமமேதான் திராவிடநாட்டில் பாக்கிஸ்தான் எதிர்ப்புப் பிரச்சினையைக் கொண்டுவந்து ஆரியர்கள் புகுத்தியதாகும்.

திராவிட மக்கள் உண்மை உழைப்பாளிகளானால் ஆரியத்தில் இருந்து அடியோடு விடுபடமுயலும் ஆரியரல்லாதார், ஆரியம் வேண்டாதார் ஆகிய எல்லோருடனும் ஒத்துழைத்து உதவி செய்யவேண்டியதுதான் யோக்கியமான தொண்டு ஆகும்.

ஆதலால் புத்தாண்டு நினைவுக்குறியாகவும், பொங்கல் விழா படிப்பினைக்குறியாகவும் திராவிடப் புலவர்களுக்கும் திராவிடக் காளைகளுக்கும் நாம் மனம் நிறைந்த வேண்டுகோள் சேதியாக, மகிழ்ச்சிப் பொங்கலோடு விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

## கோவை மாவட்ட நிர்வாகக்கமிட்டிக்கூட்டம்

இம்மாதம் (ஜனவரி) 22ந் தேதி புதன்கிழமை மாலை 3மணிக்கு ஈரோடு கச்சேரிவீதியிலுள்ள கோவை மாவட்ட திராவிடர்கழகக் கட்டிடத்தில் கோவை மாவட்ட நிர்வாகக்கமிட்டிக்கூட்டம் நடைபெறும். அது சமயம் கோவை மாவட்டத் திராவிடர் கழகத்திற்கு 1947ம் ஆண்டிற்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படும். கோவை மாவட்டத்தில் திராவிடர் கழக நிதி வசூல் செய்வதைப்பற்றிப் பேசப்படும். கோவை மாவட்டத்திலுள்ள எல்லா திராவிடர் கழகங்களையும் சேர்ந்த நிர்வாகிகளும், அங்கத்தினர்களும் மேற்படி கமிட்டிக் கூட்டத்திற்கு வரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

தலைவர் அர்ச்சுனன் அவர்கள் முடிவெய்திய பிறகு இக்கூட்டம் தான் முதலாவது கூட்டமாதலால் அனைவரும் அருள்கூர்ந்து வரும்படி வேண்டுகிறோம்.

பெரியார் ஈ வெ ரா. அவர்களும் அன்று நடக்கும் கூட்டத்தில் கலந்து கொள்வார். இதையே அழைப்பாகக் கொண்டு யாவரும் வரும்படி வேண்டிக்கொள்கிறோம்.

P. பழனிச்சாமி,
S. R. சந்தானம்
செயலாளர்கள்,
கோவைமாவட்ட திராவிடர் கழகம்.
ஈரோடு.

# தொழிற்சங்கமும் தொழிலாளரும்

தொழிற் சங்கம் தொழிலாளர் நலனைப் பாதுகாத்தற் பொருட்டு அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டது. அத்தொழிற் சங்கம் எந்த நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்டதோ அந்நோக்கத்திற்குச் சிறிதளவும் பயன்படவில்லை; யாருடைய நலன் பாதுகாக்கப்படுவதற்கு எழுந்ததோ அவர்களின் நலனும் பாதுகாக்கப்படவில்லை.

அரசாங்கத்தாரால் மக்களின் நலன் கருதி ஏற்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் ஒவ்வொரு சட்டமும் மக்கள் நலனுக்குத் தக்க முறையில் பயன்படுவதில்லை. ஏனெனில் சட்டம் செய்பவர்கள் வேறு; அச்சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டியவர்கள் வேறு. பொறுப்பில்லாத மக்களே சட்டம் செய்கிறார்கள். ஆகவே தொழில் சங்கத்தின் குறிக்கோளும் நடைமுறையில் நடத்திக் காட்டப்படவில்லையெனின் அதில் நமக்கு ஆச்சரியமில்லை.

ஆனால் அச்சட்டங்கள் எல்லாம் ஒரு சிறு கூட்டத்தாருக்குப் பயனுடையதாக இருக்கின்றன. அதாவது அச்சட்டத்தை வைத்துக்கொண்டு ஒரு கூட்டத்தார் தங்கள் நலனைப் பாதுகாத்துக்கொள்ளவும், பெருக்கிக்கொள்ளவும் செய்கின்றனர். அப்படிப்பட்டவர்களால்தான் சட்டங்கள் செய்யப்படுகின்றன.

உதாரணமாகச் சாரதா சட்டத்தை எடுத்துக்கொள்வோம். 14வயதுக்கு மேற்பட்ட பெண்ணும் 18 வயதுக்கு மேற்பட்ட ஆணும் தான் திருமணம் புரிந்துகொள்ளலாமென்பது சாரதா சட்டம். இச்சட்டத்திற்கு மாறுபட்டுத் திருமணம் புரிந்துகொள்பவர்கள் தண்டனைக்குட்படுவார்கள். ஆனால் இச்சட்டத்தைப் புறக்கணித்துத் திருமணம் புரிந்துகொண்டவர்களைத் தண்டிக்கும் முறை வகுக்கப்பட்டதில்தான் சட்டம் செய்தோரின் சூழ்ச்சி பிரதிபலிக்கிறது. 12வயதுடைய ஒரு பெண் திருமணம் புரிந்துகொண்டாள் என்பதை அரசியலாருக்கு எடுத்துக்காட்ட விரும்புகின்றவன் முன்பணமாக 100ரூபாய்க் கட்டவேண்டும். 100 ரூபாய் முன்பணம் கட்டி சாரதா சட்டத்தை மீறியவர்களைத் தண்டனைக்குட்படுத்த வேண்டுமென்றால் யார் அதன்படி பணம்கட்ட முன்வருவார்கள்?

அதேமாதிரிதான் பதிவுத் திருமணச் சட்டமும். 21வயதிற்கு மேற்பட்ட பெண்தான் தன் விருப்பம்போல் பதிவுத்திருமணம் புரிந்துகொள்ளலாமாம். அவ்வயதிற்குக்கீழ்ப்பட்டவள் பெற்றோர் விருப்பம் பெற்றுதான், தான் விரும்பிய மணாளனை பதிவுத் திருமணச் சட்டப்படி வாழ்க்கைத் துணைவனாகக் கொள்ளவேண்டுமாம். வைதிகத்தில் மூழ்கிய, பெண்களை அடிமைகளாகக் கருதக்கூடிய பெற்றோர்கள் 21 வயதிற்குக் கீழ்ப்பட்ட தம் பெண் விரும்பியபடிப் பதிவுத் திருமணம் புரிந்துகொள்ள சம்மதிப்பார்களா?

இன்னும் உணவு விடுதிகளில் யார்வேண்டுமானாலும் செல்லலாம், ஆனால் உணவுவிடுதியின் சொந்தக்காரர்களின் விருப்பம் பெற்றுதான் செல்லுதல் வேண்டும் என்ற சட்டமும், கோயிலுக்குள் ஆதித்திராவிடர்கள் செல்லலாம், ஆனால் பொது மக்கள், கோயில் நிர்வாகிகள் முதலியவர்களின் சம்மதம் பெற்றுதான் செல்லவேண்டும், அதுவும் பார்ப்பனர் செல்லும் இடத்திற்குச் செல்லமுடியாது என்ற சட்டமும் மேற்குறிப்பிடப்பட்டவைகள் போலவே குறைபாடுடையன. உணவு விடுதிகளையெல்லாம் முற்றுகையிட்டுள்ள பார்ப்பனர்களும் வடநாட்டினரும் ஆதித்திராவிடர்களை உணவு விடுதிக்குள் அநுமதிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதும், வைதீகச் சேற்றில் மூழ்கியுள்ள பொதுமக்களும், கோயில்களை நிர்வாகிக்கும் பார்ப்பனர்களும், பார்ப்பனப் பாதந்தாங்கிகளும் பறையர்களைப் பரந்தாமன் பள்ளிகொண்டிருக்கும் இடத்திற்குச் செல்ல அநுமதிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதும் அறிவீனம் என்றுதான் கூறவேண்டும்.

எனவே மேற்கூறிய சட்டங்களிலிருந்து நாம் அறிந்துகொள்வதெல்லாம் அச்சட்டங்கள் யாருடைய நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டனவோ அவர்களின் நன்மைக்கு அவை பயன்படுவதில்லை என்பது மறுக்கமுடியாத உண்மை என்பதுதான். மேலும் அச்சட்டங்களின் மூலக்கருத்துகளே கொலை செய்யப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. அதேபோல் அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட தொழிற் சங்கமும் வேலைசெய்து வருவதில் நமக்கு வியப்பில்லை.

தொழிற்சங்கம் ஏற்படுத்தப்பட்டதை நாம் குறைகூறவில்லை. அத்தொழிற்சங்கத்தின் சட்டதிட்டங்களின் 22 பிரிவுதான் தொழிலாளர்களின் நலத்தைப் பாழ்படுத்தக்கூடியதாயுள்ளது. 22வது பிரிவின்படித் தொழிற்சங்க நிர்வாகிகளுள் பகுதிக்குக் குறைந்தவர்கள் தொழிற் சங்கத்திற்குச் சம்பந்தமில்லாதவர்களாக இருக்கலாம் என்பது. அப்பிரிவைத்தான் நாம் ஓட்டை என்கின்றோம். அப்பிரிவை அடிப்படையாக வைத்துக்கொண்டே

கம்யூனிஸ்ட்களும், காங்கரஸ் சோஷலிஸ்ட்களும் தொழிற்சங்கத்திற்குள் புகுகின்றனர். அவர்கள் தொழிற்சங்கத்திற்குள் புகுந்து தங்களின் தனிப்பட்ட கட்சி விளம்பரத்துக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபடுவதைத் தவிர தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதில்லை என்று கூறலாம்.

கம்யூனிஸ்ட்களும் சோஷலிஸ்ட்களும் தொழிற்சங்கங்களில் போட்டிபோட்டுக்கொண்டு உட்புகுந்து தொழிலாளர்களுக்குப் பல இடையூறுகள் செய்கின்றனர். இவ்விரு சாராரும் தொழிற்சங்கங்களுள் புகுவதால் ஒவ்வொரு தொழிற்சாலையிலும், தொழிலாளர்கள் வேலைசெய்யும் பொதுஸ்தாபனத்திலும் இரண்டு சங்கங்கள் ஏற்படுகின்றன. பொதுவாகத் தொழிற்சாலைகளில் ஏற்படும் சச்சரவுகளுக்குக் காரணம் இவ்விரு சங்கத்தாரும் செய்துகொள்ளும் தகராறுதான் என்று கூறலாம்.

காங்கரஸ் சோஷலிஸ்ட்களும் கம்யூனிஸ்ட்களும் உள்ளே புகுந்துகொண்டு சண்டைகளை மூட்டிவிடுவதால் 100க் கணக்கில் 1000க்கணக்கில் சுடுபட்டும், மண்டை உடைபட்டும் துன்பம் அநுபவிப்பவர்கள் வெள்ளை உள்ளம்படைத்த தொழிலாளர்களே யொழிய மற்றவர்களில்லை.

ஆனால் தொழிலாளர்கள் கம்யூனிஸ்ட்களை ஓரளவில் ஆதரிக்கின்றனர் என்றால் அவர்களுக்குக் கம்யூனிஸ்ட்கள் ஆசை வார்த்தைகள் கூறி அவர்களை ஏய்க்கின்றனர். 'தொழிலாளர்களின் கூலியை உயர்த்துகிறோம், அவர்களின் வேலைநேரத்தைக் குறைக்கின்றோம், என்று தொழிலாளர்களிடத்தில் ஆசைமொழி பேசுகின்றனர் கம்யூனிஸ்ட்கள். அவர்களின் பேச்சை நம்பி போராட்டத்தில் இறங்குகின்றனர் தொழிலாளர்கள்.

ஆனால் போராட்டத்தில் இறங்குவதால் வரும் பலனைப் பற்றி அவர்கள் கருதுவதில்லை. காரணம் அவர்கள் அதைப் பற்றிச் சிந்திக்கவிடாமல் கம்யூனிஸ்ட்கள் தடுப்பதுதான்.

அதே நேரத்தில் காங்கரஸ் சோஷலிஸ்ட்கள் சில தொழிலாளரைக் கைப்பற்றிக்கொண்டு 'மக்கள் சர்க்கார் ஆட்சி செலுத்துகின்றது; எனவே நீங்கள் போராட்டத்தில் இறங்காதீர்கள்' என்று கூறி போராட்டம் செய்கின்றவர்களைத் தடை செய்ய ஏற்பாடு செய்கின்றனர். இந்நிலையில் போராட்டம் செய்யும் தொழிலாளர்களுக்கும், போராட்டம் செய்யக்கூடாது என்று சொல்லும் தொழிலாளர்களுக்கும் பெரும்போர் நிகழ்கின்றது. உடனே கலகத்தையடக்க போலீஸ் குறுக்கிடுகின்றது. அதனால் 100க்கணக்காகத் தொழிலாளர்கள் உயிரிழக்கின்றனர்.

ஆகவே கம்யூனிஸ்ட்களும், காங்கரஸ் சோஷலிஸ்ட்களும் தொழிற் சங்கத்தில் புகுந்து வேலைசெய்ய சட்டம் இருப்பதால்தான் இப்படிப்பட்ட கோரமான விளைவுகள் உண்டாகின்றன என்று கூறலாம்.

எனவே நாம் கூறுவதெல்லாம் "தொழிலாளர்கள் தங்கள் நலனைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளட்டும், அன்னியர்கள் அவர்களுக்குள்ளே பிரவேசிக்கக்கூடாது" என்பதுதான். அதற்காகத் தொழிற் சங்க சட்டத்தின் 22வது பிரிவை அரசாங்கத்தார் நீக்கிவிடவேண்டும் என்றும் கூறுகிறோம்.

ஆனால் அரசாங்கத்தார் இந்த 22வது பிரிவை நீக்கமாட்டார்கள் என்றுதான் எதிர்பார்க்கவேண்டியிருக்கின்றது. காரணம் இப்பிரிவை நீக்கிவிட்டால் காங்கரஸ் சோஷலிஸ்ட்கள் தொழிற் சங்கத்திற்குள் புகுந்து தங்கள் கட்சிக்குப் பலம் ஏற்படுத்த முடியாமல் போய்விடும் என்று அஞ்சுவதுதான்.

ஆனால் திராவிடர் கழகம் தொழிலாளர்களைப்பற்றி என்ன நோக்கம் வைத்துள்ளது என்று கேட்கலாம். திராவிடர் கழகமே தொழிலாளரின் இயக்கமாகும். நாட்டின் கண் 100க்குத் 90பேர்களுக்குமேல் பிறவித் தொழிலாளர்களாகவும் நடைமுறையில் தொழிலாளர்களாகவும் உள்ளனர். அவர்கள் அனைவருக்காகவும் திராவிடர்கழகம் பாடுபடுகின்றது. எனவே தொழிற் சங்கத்திற்குள் புகுந்து திராவிடர் கழகம் வேலைசெய்ய வேண்டுமென்பது அவசியமில்லை. கம்யூனிஸ்ட் கட்சியினரைப்போல் 'தொழிலாளர்களுக்குக் கூலியை உயர்த்துகிறோம், வேலை நேரத்தைக் குறைக்கின்றோம்' என்று ஆசை வார்த்தை பேசவில்லை திராவிடர் கழகத்தினர். திராவிடர் கழகத்தினர் கூறுவதெல்லாம் தொழிலாளர்கள் தொழிற்சாலையின் பங்குதாரர்களாக ஆகவேண்டுமென்பதுதான். மேலும் தொழிலாளர்கள் உண்மையில் பிறப்பினால் தொழிலாளர்கள் அல்ல என்றும், வாய்ப்பினால் அவர்கள் தொழிலாளர்களாக ஆக்கப்பட்டவர்கள் என்றும் ஆக்கப்படவேண்டும் என்பதற்காகவும், பிறவியில் சாதி இருக்கக்கூடாது என்பதற்காகவும் திராவிடர் கழகம் பாடுபடுகின்றது.

தொழிலாளர்களுக்குக் கூலியை உயர்த்துவதும், வேலை நேரத்தைக் குறைப்பதும் வெளியிலிருந்து தொழிற்சங்கத்துள்

புகுகின்றவர்களின் வேலையல்ல. அது தொழிலாளர்களாலேயே செய்துகொள்ளப்பட வேண்டியதாகும்.

மேலும் சூத்திரன் (தேவடியாள் மகன்) சற்சூத்திரன் (நல்ல தேவடியாள் மகன்) என்று ஆவதால் ஒரு பகுத்தறிவற்றவன் எவ்வளவு பலனைப் பெறுவதாகக் கருதுகின்றானோ அவ்வளவு பலனைப் பெற்றதாகத்தான் 10 அணா கூலிபெற்ற தொழிலாளி ரூ. 1-0-0 பெற்றால் கருதுவானே ஒழிய அவன் தொழிலாளி தன்மையிலிருந்து மீளமாட்டான். அதாவது தான் தொழிலாளி—முதலாளிக்கு அடிமை என்பதை அதிகக் கூலிபெறுவதன்மூலம் ஊர்ஜிதப்படுத்திக்கொள்கிறான் என்று கூறலாம். ஆனால் தொழிலாளர்கள் தொழிற்சாலையில் காலப்போக்கில் பங்குதாரர்களாக ஆக்கப்படுவது சூத்திர பட்டம் நீங்கிய அடிமையை ஒழிப்பதற்கு சமமாகும். அதற்காகத்தான் திராவிடர் கழகமும் பாடுபட்டு வருகின்றது.

சாதியில், பிறப்பில், காரியத்தில் உழைப்பு இல்லாத பார்ப்பனர்கள் தொழிலாளர்கள் காரியத்தில் பிரவேசிக்கிற பித்தலாட்டங்களுக்கு இடம்தந்தது தொழிற்சங்க சட்டத்தின் 22வது பிரிவேயாகும்.

பார்ப்பனர்களையே தலைவர்களாகக் கொண்ட கம்யூனிஸ்ட்கட்சியும், காங்கரஸ் சோஷலிஸ்ட் கட்சியும் தொழிலாளரின் இழி நிலையை மாற்றியமைக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஆகவே பார்ப்பான் சம்பந்தப்பட்ட எந்தத்தொழிலாளர் சங்கமும் தொழிலாளிகள் என்பதாக (சூத்திரர்—அடிமை என்பதாக) ஒரு இனம் அல்லது வர்க்கம் நாட்டில் இருக்கக்கூடாது என்று வேலைசெய்ய முடியவே முடியாது. அப்படி வேலை செய்வதாயிருந்தால் பார்ப்பனன் தற்கொலை செய்துகொள்ள சம்மதித்ததாகத்தான் அருத்தம். உலகில் எந்தக் கீழான ஜீவனும் தற்கொலை செய்துகொள்ளச் சம்மதிக்காது. அன்றியும் தொழிலாளிகள் (சூத்திரர்கள்) பாடுபடுவதால் பார்ப்பனர்கள் தற்கொலை செய்துகொள்வார்கள் என்று எண்ணுவது உலகில் கடைசி மடமையேயாகும்.

எனவே சமுதாயத்தில் 100க்கு 90பேர்களாக உள்ள தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் திராவிடர் கழகத்தில் தொழிலாளர்கள் பங்கு கொள்ளவேண்டுமென்கின்றோம்.

தொழிலாளர்களின் நலனைப் பொருட்படுத்தி அவர்களுக்குப் பாடுபடுவதில்லை திராவிடர் கழகம் என்று சிலர் குறைகூறுவர். அது முற்றிலும் தவறு. தொழிலாளர்களின் நேர்மையான போராட்டத்திற்கு பக்கபலமாயிருந்து திராவிடர் கழகம் போராடுவதில் தவறுவதில்லை என்பதை யாரும் ஏற்றுக்கொண்டுதானாகவேண்டும்.

தென்னிந்திய இரயில்வே தொழிலாளர்கள் உரிமைக்காகப் போரிட்டனர் என்ற காரணத்தால் அவர்களின் போராட்டத்தை ஆதரித்து அதில் பங்கும் கொண்டனர் திராவிடர் கழகத்தினர்; ஆகவே தொழிலாளர்களின் நியாயமான போராட்டத்தைத் திராவிடர் கழகத்தார் முற்றிலும் வரவேற்பதோடு பங்குகொண்டு வேலை செய்யவும் தயார் என்று உறுதிகூறுகிறோம். இதனால் தொழிற் சங்கத்திற்குள் புகுந்துகொண்டுதான் திராவிடர்கழகத்தினர் வேலைசெய்ய வேண்டுமென்பதில்லை.

ஆகவே தொழிலாளர்கள் தங்கள் நலத்தைத் தாங்களாகவே பாதுகாத்துக்கொள்ள வேண்டும்; அன்னியர்களைத் தொழிற்சங்கத்துள் புகவிட்டு தங்களைப் பிளவுபடுத்திக்கொண்டு பல கஷ்டநஷ்டங்களுக்கு ஆளாகவேண்டாம் என்று கூறுகிறோம்.

உள்ளபடியே நாட்டிலே குழப்பம் விளைவிக்கக்கூடாது என்று அரசாங்கம் கருதுமானால், அன்னியர் தொழிற் சங்கத்துள் புகலாம் என்னும் சட்டத்தைப் போக்கட்டும். அன்னியர்கள் உள்ளே புகுந்த காரணத்தால் ஏற்படும் குழப்பத்தை அடக்குகின்ற வகையில் கஷ்டநஷ்டங்களுக்காளாகின்றவர்கள் வெள்ளையுள்ளம் படைத்த தொழிலாளர்கள்தான் என்பதை அரசாங்கம் உணரட்டும்.

கம்யூனிஸ்ட்கள் தொழிற்சங்கத்துள் புகுந்து குழப்பம் விளைவிப்பதாலேயே கம்யூனிஸ்ட்களும் பல தொல்லைகளுக்காளாக நேரிடுகின்றது. அவர்கள் உள்ளே புகுவதற்குக் காரணம் தொழிற்சங்க சட்டத்தின் 22வது பிரிவுதான். அப்பிரிவை அரசாங்கத்தார் எடுத்துவிட முன்வருவதில்லை. ஆனால் கம்யூனிஸ்ட்களால்தான் குழப்பம் நடைபெறுகின்றதென்று அவர்களைப் பல தொல்லைகளுக்குட்படுத்துவதில் பின்வாங்குவதில்லை. அரசாங்கத்தாரால் செய்யப்படும் இச்செயல் குழந்தையின் தொடையைக்கிள்ளிவிட்டு குழந்தையை அழவேண்டாம் என்று கூறி அடிப்பது போலுள்ளது.

ஆனால் தொழிற்சங்கத்திற்கு உள்ளே சென்றுள்ள கம்யூனிஸ்ட்களை ஒழித்துக்

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilian Press, 42, Cutcherystreet, ERODE.